(ரு) "ஆசைபொருந்தினர் பொருந்தார்" எனச்சிறப்புப்பற்றி உயர்திணைமேல் வைத்துச் சொன்னாரேனும், "ஒரு மொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே" என்பதனால் பிரமாமுதற் றம்பபரியந்தமான சேதனப் பிரபஞ்ச முழுவதுங் கொள்ளற்பா லனவாம். "உள்ளம்" என்றது அந்தக்கரணம். "உள்ளந்தன்னில்" என்றது சாதி யொருமை.

கிரிநதியாதிய வசேதனப்பிரபஞ்சத்தின்கண் ணந்தக்கரண மின்மையின், அவைகளில் அவச்சின்னசேதனம் ஞானமென்றும், சாட்சியென்றுஞ் சொல்லப்படவில்லை.

"ஆசை பொருந்தினர் பொருந்தா ருள்ளந் தன்னிலந் தரத்திற் சீவ சாட்சிமாத் திரமாய் நிற்கும்" என்றதால் அந்தக்கரணமொன்றே பிரமாதாவுக்கு விசேடணமும், சாட்சிக்கு உபாதியுமாம் என்பது பெற்றும்.

(சா) அங்ஙனமாயின், அவ்விரண்டின்றன்மையும் யாவையோவெனின்? ஒன்றன் சொரூபத்திற் பிரவேசித்து வியாவர்த்தகமாகிநிற்பது விசேடணம். அந்நியத்தினின்றும் ஒன்

றை வேறுபடுத்துவது வியாவர்த்தகமாம். எது வேறுபடுத்துக்காட்டப்படுமோ அது வியாவர்த்தியமாம். நீலக்குடமென்புழி நீலத்தன்மை குடத்தின் விசேடணம். என்னை? நீலக்குடத்தில் நீலத்தன்மை பிரவேசித்து அதனைப் பொன்மைக்குட முதலியவற்றினும் வேறுபடுத்துக் காண்பித்தலான்; அந்நீலத்தன்மை விசேடணமாம். அவ்வாறு பிரமாதாவுக்கு அந்தக்கரணம் விசேடணமாம். என்னை? பிரமாதாவின் சொரூபத்தி லந்தக்கரணம் பிரவேசித்து அதனைப் பிரமேய சேதனத்தினின்றும் வேறுபடுத்துக்காண்பித்தலால் என்க.

ஒன்றன் சொரூபத்திற் பிரவேசியாமல் வியாவர்த்தகமாய் நிற்பது யாது அது உபாதியெனப்படும். நியாயமதத்தில் கர்ணசட்குலியின் அவச்சின்னுகாயஞ் சுரோத்திரேந்திரிய மெனப்படும்; அங்கே கர்ணசட்குலி சுரோத்திரேந்திரியத்திற்கு பாதியாம். என்னை? சுரோத்திரேந்திரியத்தின் சொரூபத்திற் கர்ணசட்குலி பிரவேசியாமல் வாகிய வாகாயத்தினின்றும் சுரோத்திரேந்திரியத்தை வேறுபடுத்துக் காண்பித்தலால் உபாதியாம். [கர்ணசட்குலியென்பது செவித்துளை.]

வேறுமொரு திருஷ்டாந்தம்.

கடாகாயமானது மணு* பரிமாண அந்நத்திற்கு அவகாசங்கொடுப்பதால் ஆகாயத்திற்குக்கடம் உபாதியாம். என்னை? மணு அந்நத்திற்கு இடங்கொடுக்குமாகாயத்தின் சொரூபத்தில் கடம் பிரவேசியாமல், வியாபக வாகாயத்தினும் வேறுபடுத்துக் காண்பித்தலால் மணு அந்நத்திற்கு அவகாசங்கொடுக்கும் ஆகாயத்திற்குக் கடம் உபாதியாம்.

அதுபோல் அந்தக்கரணவுபகித சேதனம் சாட்சியாமென்புழி, அந்தக்கரணம் சாட்சிக்கு உபாதியாம். என்னை? அந்தக்கரணம் சாட்சியின் சொரூபத்திற் பிரவேசியாமல், பிரமேய சேதனத்தினும் சாட்சியை வேறுபடுத்துக் காட்டுவதால் என்க. அந்தக்கரண மொன்றே சாட்சிக்கு உபாதியாகவும், பிரமாதாவுக்கு விசேடணமாகவும் நின்றமை காண்க. இவ்வாற்றுல் அந்தக்கரண வுபகிதசேதனமோ சாட்சியாம். அந்தக்கரண விசிட்ட சேதனம் பிரமாதாவாம்.

---

* மணு = மணங்குஎன்னும் ஓரெடுத்தலளவை.

உபாதியுடையது, உபகிதமென்றும், விசேடண முடையது, விசிட்ட மென்றுங் கூறப்படும்.

அந்தக்கரண விசிட்டமான பிரமாதாவே கர்த்தா, போக்தா, சுகி, துக்கி என்னும் சம்சாரியாகிய சீவனும்; இது அவச்சேதவாதத்தின் றன்மை.

இனி ஆபாசவாதம்.

ஆபாசவாதத்தில் ஆபாச சகித வந்தக்கரணம் சீவனுக்குவிசேடணம். ஆபாசசகிதவந்தக்கரணம் சாட்சிக்கு உபாதியாம்; ஆதலால் ஆபாசத்தோடு கூடின வந்தக்கரண விசிட்டசேதனம் சீவனும். ஆபாசத்தோடு கூடின வந்தக்கரண வுபகிதசேதனம் சாட்சியாம். இரண்டு பட்சத்திலும் விசேடணத்தோடு கூடின சேதனம் சீவனும்; அவனே சம்சாரியாம். ஆயினும் விசேடிய பாகமான சேதனத்தின் கண்ணேயோ, ஜநநமரண முதலிய சம்சாரசம்பவமில்லை. விசேடண மாத்திரத்தில்அச்சம்சாரம்உண்டு. ஆதலான் இக்கருத்தை யறிவித்தற் பொருட்டே பிரம கீதையில் "பருதி நெஞ்சிலு மொழிந்தவர் நெஞ்சிலும் பரனே, கரிய தாகிநின் றறிபவன்" என்றும், "உருத்திரன்மான் முதலாகத் தம்பமீறு வுளபொருட்குஞ் சான்றுகு மொருவன்" என்றும், பாகவதத்தில், "சொன்ன புந்தியிற் கரியெனத் தோன்றிய வறிவை" என்றும், கூறப்பட்டிருப்பது போல, "ஆசை பொருந்தினர் பொருந்தா ருள்ளந் தன்னிற் சீவ சாட்சியாய் நிற்கும்" என்றொழியாது, "சாட்சிமாத் திரமாய் நிற்கும்" என்று "மாத்திர" பதந் தந்து விசேடித்துக் கூறினர்.

(எ) ஆபாச சாட்சியென்றது "சீவ சாட்சி" எனப்பொதுப் படக் கூறினமையின், இவ்வாசிரியர்க்கு அவச்சேதவாதந்தான் உடன்பாடாமோ வெனின்? இரண்டாம் படலத்தில் "உன்முகம் போற்கண்ணாடிக் குள்ளொரு முகங் கண் டாற்போல், சின்மய வடிவின் சாயை சித்துப்போற் புத்தி தோன்றும்" என்றுபாசவாதங் கூறப்பட்டிருப்பதால், இவர்க்கஃதுடன்பாடன்றென்க. இவருடன்படாமைக்குக் காரண மென்னையோ வெனின்? பாஷியகாரர் ஆபாசவாத மங்கீகரித்திருப்பதானும், வித்தியாரண்ணிய

சுவாமிகள் அவச்சேத வாதத்திற் ஜேடஞ்சொல்லியிருப் பதானு மென்க.

(அ) வித்தியாரண்ணிய சுவாமிகள் அவச்சேத வாதத்திற் சொல்லிய தோட மென்னையோவெனின் ? அது கூறுதும். ஆபாசரகிதவந்தக்கரண வவச்சின்ன சேதனத்தைப் பிர மாதாவாக வொப்பிடில் ? கடாவச்சின்ன சேதனமும் பிர மாதாவாக வேண்டும். என்னை ? எப்படி அந்தக்கரணம் பூதங்களின் காரியமோ அப்படிக்கடமும் பூதகாரியமாம் ; அன்றியும், அந்தக் கரணம் சேதனத்தின் வியாவர்த்தக மாக எப்படியுளதோ அப்படிக்கடமும் சேதனத்தின் வி யாவர்த்தகமாம் ; ஆதலால் அந்தக்கரண விசிட்டம்போ லக்கடவிசிட்டமும் பிரமாதா வாதல்வேண்டும். அந்தக் கரணத்தின்கண்ணுபாசக் கிரகணம் அங்கீகரிக்கில் இவ் வாறான தோடமின்றாம். என்னை ? அந்தக் கரணமோ பூதங்களின் சத்துவகுண காரியமாகலின், சொச்சமாம். கடமுதலியவை பூதங்களின் றமோகுண காரியமாகலின், சொச்சமல்ல. யாது சொச்ச பதார்த்தமாமோ அதுவே ஆபாசயோக்கியமாம். மலினபதார்த்தம் ஆபாசயோக்கிய மாகா ; இஃதெதுபோலவெனின் ? கண்ணாடியும், அதன் மூடியும் போல வென்க. இவ்வாற்றால் அந்தக் கரணத் தின்கண் இருவிதப் பிரகாசமுள ; ஒன்றோ வியாபகமா ன சேதனப் பிரகாசம். மற்றொன்றாபாசப் பிரகாசம். சரீராதிகளிலும், குடமுதலியவற்றிலும் ஒரு வியாபகமா ன சேதனத்தின் பிரகாசமோ வுண்டு. மற்றோராபாசப் பிரகாச மில்லை. ஆதலால் இருவிதப் பிரகாசத்தோடு கூடின அந்தக்கரண விசிட்டசேதனமே பிரமாதாவென ப்படும். ஒரு வியாபகசேதனப் பிரகாசத்தோடு கூடின கடாதி விசிட்டசேதனம் பிரமாதா வன்று. எவருடை ய மதத்தில் அந்தக் கரணத்தில் ஆபாசமில்லையோ, அவ ருடைய மதத்தில் கடாதிகளைப் போல அந்தக்கரணத்தி லும் ஆபாசப் பிரகாச மில்லை. வியாபக சேதனத்தின் யாதொரு ஏகப் பிரகாசம் அந்தக் கரணத்தின்கண்ணு ண்டோ, அவ்வியாபக சேதனத்தின் பிரகாசமே கடாதி

க்கண்ணும் உளது; ஆதலால் அந்தக்கரண விசிட்டம் போலக் கடவிசிட்ட சேதனமும், சரீரவிசிட்டசேதனமும், குட்டியவிசிட்ட சேதனமும் பிரமாதாவாதல் வேண்டும். அங்ஙன மாகாமையின், ஆபாசவாதமே உத்தமம். அவச்சேதவாதம் அன்று. இவ்வாறுனதோடங் கூறியிருத்தலின் அவச்சேதவாதம் இவர்க்குஉடன்பாடன்றென்க.

(௯) எப்படி அந்தக்கரணம் ஆபாசசகிதமாகவுளதோ, அப்படியே அந்தக்கரணத்தின் விருத்தியும் ஆபாசசகிதமாகவேயுளது. அந்தக்கரண விருத்தி நேத்திரேந்திரியவாயிலாகப் புறம்போந்து விடயசமானகார மடையும்; அப்போதுஅவ்விருத்திபாகத்தால் விடயத்தின்கண் ஆவரணம்பங்கமாம்; ஆகவேஆபாசனல் இதுகடம், இதுபடம் என இவ்வாறுவிடயம் பிரகாசியா நிற்கும். இவ்வாறே ஏனையவிந்திரியவாயில்லாகப்புறம்போந்துறும் விருத்திகளிலும் ஊகிக்க.

புறம்பே சாட்சிப்பிரகாசம் எவ்வா றுள்ளதோவெனின்? கடத்தை நான் கண்டேனென்று கடஞானத்தின் பின்னிகழாநிற்கும் பிரகாசமே சாட்சியாமென்க. [பிரகாசமெனினும், ஞானமெனினும்ஒக்கும்.]

(௧0) இனி உள்ளே இருவிதப்பிரகாசங்களைக் கூறுதும். இச்சை, ஞானம், கிரியை, சுகம், துக்கம், துவேடம் இவை ஆறும் பிரதானகுணங்கள். நியாயமதத்தில் இவைகளை ஆன்மாவின் குணமென்பர். வேதாந்தத்தில் அந்தக்கரணத்தின் பரிணமமென்ப. இவைகளில் ஒன்று பிரகாசமாகும்போது சிதாபாசனைக்காணலாம். அல்லாதபோது அவனைக்காணக்கூடாது. ஆகலின் தப்தாயபிண்டத்தக்கினி போன்று அவைகளே தானகப்பிரகாசிப்பவன் ஆபாசன்.

சாக்கிரசொப்பனங்களில்விருத்திகள், விருத்திகளின் அந்தராளம், சுழுத்திமுதலியவற்றில் விருத்திகளின் அபாவம் ஆகிய இவைகளை

ப்பிரகாசிப்பிப்பது சாட்சியாமென்க. சாட்சிப்பிரகாசத்தில் விருத்தி யநங்கீகார பட்சம் உரைக்கப்பட்டது.

இனி விருத்தியங்கீகாரபட்சம்.

(கக) அவித்தை, அந்தக்கரணங்களின்பரிணாமம்விருத்தியென ப்படும். குரோதசுகாதிகளும், ஆகாசாதிகளும்முறையே அந்தக்கரணம், அவித்தை இவைகளின் பரிணாமமாயினும் அவைகளால் யாதொருவிஷயமும்பிரகாசியாமையின், அவை விருத்தியென்றுசொல்லப்படவில்லை. மற்றெதை விருத்தியென்பரோவெனின்? அவித்தை, அந்தக்கரணங்களின்ஞான ரூபபரிணாமத்தால் விடயங்கள் பிரகாசமாகலின், அதனையேவிருத்தியென்பர்.

சுகதுக்கம், காமக்குரோத முதலிய எவ்வளவு அந்தக்கரணத்தின்பரிணாம முண்டோஅவைகளனைத்தையும், விருத்தியென்றுசாஸ்திரங்களில்விவகரித்திருக்கினும் தத்வாநுசந்தானஅத்வைதகௌஸ்துப முதலியகிரந்தங்களில் பிரகாசகபரிணாமமேவிருத்தி யென்றனர். ஆதலான், மாயை, அந்தக்கரணங்களின்ஞானரூபபரிணாமமேவிருத்தி சத்தத்திற்குஅத்வைத மதத்தில் பாரிபாஷிக*ப்பொருளாம். அவ்விருத்திஞானம்இருவகைத்தாம். ஒன்று பிரமா ரூபம். மற்றொன்றுஅப்பிரமா ரூபம். பிரமாணஜந்ய ஞானத்தைப்பிரமாவென்பர். அதனின் வேறான ஈசுரஞானம், சுகாதிகோசரஞானம், ஸ்மிருதிஞானம், பிரம (ஹ்ரம) ஞானம், ஆகிய இவை அப்பிரமா ரூபமாம். அவற்றுள், ஈசுரஞான முதலியவை யதார்த்த அப்பிரமா. பிரம(ஹ்ரம) ஞானம், அயதார்த்த அப்பிரமா. இவைகளின் விரிவை யறியவேண்டின் விருத்திப்பிரபாகர கிரந்தத்திற்காண்க. இது நிற்க.

எப்போது அந்தக்கரணத்தின் பரிணாமம் சுகரூபமாக, அல்லது துக்கரூபமாகவுளதாமோ, அப்போது அந்தக்கரணத்தின் ஞானரூப விருத்திசுகதுக்க கோசரமாகவுளதாகும்; அவ்விருத்தியின்கண் ணுரு

*சாஸ்த்திரத்தின் அசாதாரணசங்கேதம் பரிபாஷை; பரிபாஷையினாற் சொல்லும்பொருள் பாரிபாஷிகப்பொருளாம்.

டமானசாட்சி அவைகளைப்பிரகாசிப்பிக்கின்றது. ஆகலின் கிரந்தகாரர் சுகதுக்கம் சாட்சிக்கு விடயமென்றனர். விருத்தியன்றிக் கேவலம் சாட்சிக்கு விடயமாகா.

ஈண்டிது இரகசியம்.

(கஉ) "அந்தரத்தில்" என ஆகாயத்தை உவமானமாகக்காட்டினமையின் ஆகாயத்தின்கண் கடாகாயமென்னு நாமமும், சலம் கொணர்தலாகிய காரியமும், கடரூபஉபாதி திருஷ்டியாற்றோன்றிக்கடரூப உபாதி திருஷ்டியன்றி அவை தோன்றாமல் கடாகாயமாத்திரமே தோன்றுவதால் கடாகாயம் எப்படி மகாகாயரூபமோ அப்படிச் சேதனத்தின்கண் சாட்சியென்னு நாமமும், சுகதுக்காதிதர்மங்களோடு கூடின வந்தக்கரணத்தின் பிரகாசரூபமாகிய காரியமும், அந்தக்கரணரூப வுபாதி திருஷ்டியாற்றோன்றி அவ்வந்தக்கரணரூப வுபாதி திருட்டியன்றிச் சாட்சியென்னு நாமமும், சுகதுக்காதி தர்மங்களோடுகூடின அந்தக்கரணத்தின் பிரகாச ரூபமான காரியமுந் தோன்றாமற்சைதந்நியமாத்திரமான பிரமமே தோன்றுவதால் சாட்சி "பிரமரூபமே" என்னும் ஈதோரிரகசியார்த்தமுங் கொள்ளக்கிடந்தமை காண்க.

கடவுபாதியினாற் கடாகாயமும் நாநாவாய்ப்பரிச்சின்னமாயிருப்பினும், மகாகாயத்திற்குப்பின்னமாக இராமல் மகாகாயரூபமே யாகின்றதுபோல் அந்தக்கரணவுபாதியால் சாட்சியும் நாநாவாய்ப் பரிச்சின்னமாயிருப்பினும் வியாபகமான பிரமத்திற்குப் பின்னமாகாமற் பிரமரூபமாகவேயுள்ளது. ஆதலால், "ஆசை பொருந்தினர் பொருந்தா ருள்ளந் தன்னிலந் தரத்திற் சீவ சாட்சிமாத் திரமாய் நிற்கு மேக நாயகன்" என்றார். ["சீவசாட்சி" என்பது சீவனது சாட்சி, சீவனுக்குச்சாட்சி, சீவன்கட் சாட்சி எனவிரியும்.]

"எங்கிலங் களினு மிக்க வெழுநில மவற்றின் மேலாம், நன்னில் மருவும்" என்றது ஏக நாயகனுக்கு விசேடணம். (இ-ள்) எங்கிலங்களினும்—(சாங்கியர், யோகியர் முதலிய மதஸ்தர்களால் நாநாபேதமாகக் கூறப்பட்டுள்ளனவாகிய) ஞானபூமிகளனைத்தினும்—

மிக்க எழுநிலம்- (நிரதிசயாநந்தத்தைத்தருதலால் ஆன்மேரூர்கட்கபி மதமாகச்) சிறந்தவை (சுபேச்சைமுதலியஞான) சத்தபூமிகளாம்—அவற்றில்-அப்பூமிகளுள்—மேலாம் நன்னிலம் மருவும்-மேலாகிய துரியபூமியின்கட் பொருந்தியொளிராநிற்கும்—ஏகநாயகன் பதங்கள் போற்றி.—எ-று.

துரியத்திற்குமேல் விதேககைவல்லியமாவதேயல்லாமல் வேறு பூமியின்மையின், "மேலாம் நன்னிலம்" என்றும், மகாநந்தமயமாதலின், துரியத்தை "நன்னிலம்" என்றும், தன்சொரூபமுள்ளவாறு வெளிப்படுந்தானமாகலின், "நன்னிலமருவும்" என்றுங்கூறினரென்க.

இரண்டாம்படலத்தினந்தத்தில் ஞானசத்த பூமிகளை இவ்வாசிரியரே விஸ்தாரமாகக் கூறியிருப்பதால் அவைகளை ஈண்டுவிரித்திலேம். சுபேச்சை, விசாரணை, தநுமானசி, சத்துவாபத்தி, அசம்சத்தி, பதார்த்தாபாவனை, துரியம் என்பன அப்பூமிகளின் நாமங்களாம்.

(கங) சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி என்னும் அவஸ்தைகளினபிமானமே பந்தமெனப்படும்; அவ்வவஸ்தைகளும், கோரம், சாந்தம், மூடம் என்னும், மனோவிருத்திகளாதலால் விசாரரூபம், அல்லது தியானரூபமாகிய பிரமாநுசந்தான வலியால் அவைகளுநசமாம்; ஆகவே அவைகட்குக் காரணமான மனதும் பிரமப்பிரகாசத்தில் விலீனமாம்; ஆகவே பிரமம் அகண்டைகரசமாய்த் தன்மயமாகவே விளங்காநிற்கும். நெடுங்காலம் நிரந்தரம் ஆதரவோடும் அநுஷ்டித்துவாராநின்ற பிரமாநுசந்தான வலியால் அஞ்ஞானமும், அதன் காரியங்களுமாகிய வெனர்த்தங்களின் நீங்கி நிரதிசயாநந்தமாத்திரமாகப் புருடன் விளங்காநிற்கும் ஸ்தானமே முடிந்தநிலமான துரியமாம். பிரமவித்து, வரன், வரியான் என்னு மிம்மூவர்க்குமேலாய் நான்காமவனென வரிட்டனெலடையப்படுவதாகலின், துரியமென்றுபெயராம்.

(கச) அல்லது "நன்னிலம்" என்பது துரியத்திற்கு வேதாந்தத்தின் பரிபாஷையாகிய சத்தமன்மையின், "எந்நிலங் க

ளினு மிக்க வெழுநில மவற்றின் மேலாம், நன்னில மரு வும்" என்பதற்கு, எல்லாப்பதிகளினுஞ் சிறந்தொளிரா நிற்கும் சத்தபுரியினுஞ்சிறந்த நன்னிலமென்னுந்தலத்தி ன்கண்ணே எழுந்தருளாநிற்குமென்று வேறுமொருபொ ருள்கூறினு மமையும்; இஃதமையுமாறு, "நன்னிலந் த னி லெழுந்த நாரணன் கிருபை யாலே, தன்னிய ஞானே ன் நான்." என்று இந்நூலினந்தத்தில் வித்தியாநந்தங்கூ றுங்காலையிற் கூறியிருக்குங்காரணத்தினுல் அறிக.

"நன்னிலம்" என்பது சிலேடையாய்த்துரியபூமியையும், மது வனமென்னும் ஸ்தலத்தையும் உணர்த்தாநின்றது.

(கரு) அயனரியுருத்திரராதியர்போற்றுற்ற மொடுக்கமின்மை யின்,"ஏகம்" என்றும், அன்னோர்க்கும் தான் இறையா கலின், "நாயகன்" என்றுங்கூறினர். இவ்வாற்ருல், இது காரணப்பிரமமென்பது பெற்றும்.

(கசு) மாயாவிசிட்டசைதந்நியத்தைக் காரணப் பிரமமென்று கூறி யிருக்கின்றன ராகலின், அதற்கு உள்ளந்தன்னிற் சாட்சிமாத்திரமாய்நிற்கை அசம்பவமாமேயெனின்? அ து பரமார்த்தமாகச் சுத்தப்பிரமமேயாகலான், சாட்சித்த ன்மை அதற்கு அசம்பவமாகாதென்க.

(கஎ) இவ்வாற்ருல், இஃது தோடமின்ருயினுகுக. "பதங்கள்" என்னுஞ்சத்தம் உபலட்சணமாய் ஆபாதமஸ்தக பரியந்த மான மூர்த்திபோதகமாயிருத்தலின்,இது சுத்தப்பிரமத்தி ற்கும், அப்படியே காரணப்பிரமத்திற்கும் பொருந்தாதா கலின், சரீரவிசிஷ்ட சைதந்நியங்களான காரியப்பிரமங் களுள்ளே யாதானுமொன்றைக் கூறலாமேயெனின்? அங்ஙனங் கூறுதற்குச் சதுர்ப்புஜ, திரிநேத்திர, சதுண்ட, அஷ்டபுஜாதிகளான காரியப்பிரமங்களின் சின்னங்களு ள்ளே யாதானுமொரு சின்னங்களையெடுத்து விசேஷித் திருத்தல்வேண்டும். அங்ஙனம் விசேஷியாமல், "ஏக நாயகன் பதங்கள் போற்றி" என்றதால் காரியப்பிரம

ங்களுள் யாதானு மொன்றைக் கூறுதல் பொருந்தாது. ஆயின், "பதங்கள்" என்றது காரணப்பிரமத்திற்கு அசம்பவமாமேயெனின்? அக்காரணப்பிரமம் ஓரோர் காலையில் பக்தாநுக்கிரகார்த்தம் அவர்வேண்டிய அருளுரு கொண்டாவிர்ப்பவிக்கும் ஆற்றலுடைத்தானமையின், அதற்குப்பாதங்கூறியதுஉபசாரமும், அசம்பவமுமாகாது. இதனை, புருட னென்றுரை செயப்படு வதுபரி பூரணமாகின்ற, சொருப நின்றவா நிற்கவிங் கருளொடு தோன்றவல் லவன்றனே, யரனு மன்றுமா லயனுமன் றெவர்க்குமுள் ளாகியே யாவர்க்குந், தெரிவ ருஞ்சிவ னவனையிங்கொருங்கிய சிந்தையார் தெளிவாரே." என்னும் பிரமகீதையினும், "சாவாது பிறவாது தனிமுதலா யிருந்தநா, னுவாவிவ்வுலகுபடு மழிதுயர்தீர்ப் பதற்காக, மேவாதுநின்றேயென் மாயையினுன் மெய்யேபோ, லோவாது பிறந்திடுவே னுகந்தோறு முகந்தோறும்" என்னும் பகவற்கீதையினும், "துயரில் சுடரொளி தன்னுடைச்சோதி நின்றவண்ண நிற்கவே, துயரின் மலியும் மனிதப்பிறவியிற் றோன்றிக்கண் காணவந்து, துயரங்கள் செய்துதன் றெய்வநிலை யுலகிற் புகவுய்க்குமம்மான், றுயரமில்சீர்க்கண்ணன் மாயன் புகழ்துற்ற யானோர் துன்பமிலேனே" என்னுந் திருவாய்மொழியினும், தன்பராபரம தானதிரு மேனிநிலையிற் சலனமின்றியொரு தன்மையினி னின்றருளியே, யன்பரானவர்க ணெஞ்சினிலு வந்தவடிவா யங்குவந்தவர்க ளுய்யும்வகை செய்தவருளும்." என்னும் அஞ்ஞவதைப்பரணியினும் அறிக. இது, சிஞ்ஞாசுடையோர் உபாசிக்கத்தக்கது காரணப்பிரமமேயென்னும் சாஸ்திரார்த்தத்தைத் தனதுஒழுக்கத்தால் உபதேசித்ததாம்.

(கஅ) ஸ்ரீ வியாசபகவானது அபிப்பிராயமும் இதுவே. என்னை? வியாசபகவான் ஒருவரோ ஸ்காந்தபுராணத்தில் சிவனுக்கு, சுதந்தரத்துவமுதலிய ஈசுரத்தன்மங்கூறினர். அந்நிய தேவர்க்கு, சிவகிருபையினுல் சர்வவிபூதியின் பிராப்திகூறி அதனுல் சீவதன்மங்கூறினர். அப்படியே ஒருவர்க்குப் புராணத்திலும், ஒருவர்க்கு உபபுராணத்திலுமாக விஷ்ணு,

சிவன் இவரின் வேறானகணேசாதிகட்கும், ஈசுரத்தன்மை கூறினர்; இவ்வாற்றால், வியாசருடைய வாக்கியங்களில் விரோதந் தோன்றாநிற்கின்றதே எனின்?

அதற்குச் சமாதானம்.

சர்வமும்ஈசுரனே. எந்தப்பிரகரணத்தில் அந்நியதெய்வத்தின் நிந்தைகூறியிருக்கிறதோ; அந்நிந்தை அதனுபாசனாத்தியாகத்தின்பொருட்டன்று. அப்படிவியாசர்க்கு அபிப்பிராயமில்லை. மற்றென்னையோ வெனின்? வைஷ்ணவ புராணங்களில் சிவன் முதலியோர் நிந்தையும், விஷ்ணுவின் துதியும் விஷ்ணுவின் உபாசனையில் பிரவிர்த்தித்தற்கேதுவாயிருக்கிறது. அப்படியே சிவபுராணங்களில் விஷ்ணுவாதிகளின் நிந்தையும், அவர்களினுபாசனாத்தியாகத்தின் பொருட்டாகாமல் சிவனுடைய உபாசனையில் பிரவிர்த்தித்தற்கே ஏதுவாம். ஓர் பிரகரணத்தில் அந்நியத்தினுடைய நிந்தைதியாகத்தின் பொருட்டேயாமாயின், சர்வ தெய்வங்களினுடைய உபாசனைகளுமன்றோ தியாகமாகும்; அதனால் அந்நியத்தின் நிந்தை ஒன்றன் ஸ்துதியின் பொருட்டாகவே உளது. தியாகத்தின் பொருட்டன்று.

இதற்குத் திருஷ்டாந்தம்.

(௧௯) வேதத்தில் அக்கினிஹோத்திரத்திற்கு இரண்டுகாலங்கூறியிருக்கின்றது: ஒன்று சூரியோதயத்திற்குப்பிரதமம்; மற்றொன்று சூரியோதயத்திற்கநந்தரகாலம். அங்கே உதயகாலத்தின்பிரசங்கத்தில் அநுதயகாலத்தைநிந்தித்திருக்கிறது. அநுதயகாலத்தின்பிரசங்கத்தில் உதயகாலத்தை நிந்தித்திருக்கிறது; அந்நிந்தையின்றாற்பரியம் தியாகத்திலாமாயின், இரண்டு காலத்திலும் ஓமத்தின் றியாகமாம். நித்தியகர்மத்தின்தியாகங்கூடுமா? ஆகலின், உதயகாலத்தைத்துதித்தற்பொருட்டு அநுதயகாலத்தையும், அநுதயகாலத்தைத்துதித்தற்பொருட்டு உதயகாலத்தையும் நிந்தித்திருக்கிறது; அப்படி ஓர்தேவதையின் உபாசனையின் பிரசங்கத்தில் அந்நியத்தின் நிந்தை ஒன்றன் ஸ்துதியில் தாற்பரியமாம்: அந்நியத்தின் நிந்தையில் அன்று.

(உஎ) எப்படிச்சாகாபேதத்தால் ஒருவர் உதயகாலத்திலோமம் செய்ய, ஒருவர் அநுதயகாலத்தில் ஓமஞ்செய்ய, பயன்இருவருக்குஞ்சமானமாக உண்டாகின்றதோ! அப்படிஇச்சா பேதத்தால் ஐந்துதெய்வங்களில் எதனை உபாசித்தாலும்பிரமலோகப்பிராப்தியாம். அங்கே போகங்களைப் புசித்திருந்து இறுதியில் விதேகமோட்சமும் அடைவர். விஷ்ணுவாதிகளின் உபாசனைகளால் வைகுண்டலோகாதிகளின்பிராப்தி புராணங்களிற் கூறியிருக்கின்றதன்றிப் பிரமலோகத்தின் பிராப்திகூறவில்லையே யெனின்? அங்ஙனம் கூறியிருப்பினும், உத்தமஉபாசகராய் விதேகமுத்திக்கு அதிகாரிகளாயினோர் சகலரும் தேவயானமார்க்கத்தால் பிரமலோகத்திற்கே போகாநிற்பர். பிரமலோகம் ஒன்றே, வைஷ்ணவ உபாசகர்க்கு வைகுண்டரூபமாகத் தோன்றாநிற்கும்; அவ்வுலகவாசிகளனைவரும் அவர்க்குச்சதுர்ப்புஜபார்ஷத*ரூபராய்த் தோன்றாநிற்பர்: தாமும் சதுர்ப்புஜமூர்த்தியாகாநிற்பர்; அப்படியே சைவஉபாசகர்க்கும் பிரமலோகமே சிவலோகமாகத்தோன்றாநிற்கும்; அவ்வுலகவாசிகளனைவரும் திரிநேத்திரமூர்த்திகளாகத்தம்மோடு கூடத்தோன்றாநிற்பர்; இவ்வாற்றால், சர்வஉபாசகர்க்கும் பிரமலோகமொன்றே தமது உபாசியத்தினுடையலோகமாகத்தோன்றாநிற்கும். என்னை? தேவயானமார்க்கமன்றி அந்நியமார்க்கத்தால் யாவர் செல்லாநிற்பரோ! அவர்க்கு மீளுதலுண்டாகும்; இது நியமம். தேவயானமார்க்கம் ஓர் பிரமலோகத்திற்கே உள்ளது. ஆகலின், விதேக மோட்சத்திற்கு யோக்கியரான உபாசகரனைவரும்பிரமலோகத்திற்கே போகாநிற்பர்; அது, உபாசகருடைய இச்சையின் அநுசாரமாகச்சகல சாமக்கிரிகளோடு கூட அவரவர்க்குத்தோன்றாநிற்கும்; இப்படிப்பட்ட அற்புத மகிமை அந்தப்பிரமலோகத்திற்கே உள்ளது. இவ்வாற்றால், ஐந்துதேவதைகளின் உபாசகர்க்கும் பயன் சமமாகவேயுண்டாகா நிற்கும்.

---

* பார்ஷதர்=கணங்கள், அல்லது சபையிலிருப்பவர்.

(உக) அங்ஙனமாயின், ஐந்து தேவதைகளுக்கும் நாமரூபங்கள் வெவ்வேறாகக் கூறியிருக்கின்றன. ஈசுரனே ஒருவன்; ஒரு ஈசுரனுக்கு நாநா நாமரூபம் எங்ஙனங் கூடுமெனின்?

அதற்குச்சமாதானம்.

பரமார்த்தமாக நாமரூபங்களொன்றும் பரமான்மாவின்கண்ணே உளதாக இல்லை. மந்தபுத்தியுடையோர்க்கு உபாசனையின்பொருட்டு நாமரூபரகிதமான பரமான்மாவுக்கு, மாயையினாற்பண்ணப்பட்ட கற்பிதநாமரூபங்கள் கூறினர். ஆதலால், ஓர் பரமான்மாவின்கண்ணே மாயையினாற்பண்ணப்பட்ட நாநா கற்பிதநாமரூபங்கள் கூடும்; இவ்வாற்றால், சர்வபுராணவாக்கியங்களின் விரோதமும் நிவிர்த்தியாய்விடும்.

(உஉ) புராணவாக்கியங்களில் விரோதசங்கைக்கு, முக்கியசமாதானம் யாதெனில்? விஷ்ணு, சிவன், கணேசன், தேவி, சூரியன் என்பன முதலாக எவ்வளவுநாமங்கள் ஒவ்வொன்றற்குண்டோ! அவைமுழுவதும் காரணப்பிரமத்தினுடைய நாமங்களேயாம். காரியப்பிரமங்கட்கும், அவை முழுவதும் நாமங்களாகப்பொருந்தும்; அது எங்ஙனம்? மாயாவிசிட்டமானகாரணத்தைப் பிரமமென்றவர், இரண்யகர்ப்பரான காரியத்தையும் பிரமமென்றனர்; ஆகலின், விஷ்ணு, சிவன், கணேசன், தேவி, சூரியன் என்னும்பதங்கள் காரணப்பிரமத்தையும், காரியப்பிரமங்களையும் உணர்த்துகின்றன; அப்படியே அப்பதங்களின் பரியாயநாமங்களாயுள்ள நாராயணன், நீலகண்டன், விக்கினேசன், சத்தி, பாநு இவைமுதலிய அநந்தபதங்களும் அவ்விருவகைப் பிரமங்களையும் உணர்த்துகின்றன. பிரசங்கத்திற்கு ஏற்க ஓரிடத்தில் காரணப்பிரமத்தையும், ஓரிடத்தில் காரியப்பிரமங்களையும் உணர்த்தும்.

அஃதெப்படியெனின்? சைந்தவபதம் அசுவம், லவணம் இரண்டனையும் உணர்த்துமேனும், போஜனப்பிரசங்கத்தில் லவணத்தையும், கமனப்பிரசங்கத்தில் அசுவத்தையும் உணர்த்துவதுபோலென்க. வைஷ்ணவபுராணத்தில் விஷ்ணு, நாராயணாதிபதங்கள் காரணப்பிர

மத்தையும், சிவன், கணேசன், சூரியாதிபதங்கள் காரியப்பிரமங்களையும் உணர்த்தாநிற்பனவாம். ஆதலால் வைஷ்ணவ கிரந்தத்திலுள்ள விஷ்ணுவின் துதிக்கும், சிவன்முதலியோர் நிந்தைக்கும் வியாசரது அபிப்பிராயம் காரணப்பிரமம் உபாசிக்கத்தக்கது: காரியப்பிரமங்கள் உபாசிக்கத்தக்கனவல்லவென்பதாம்; அப்படியே ஸ்காந்தபுராணமுதலிய சைவகிரந்தங்களில் சிவன், மகேசன் முதலியபதங்கள் காரணப்பிரமத்தையும், விஷ்ணு, கணேசன், தேவி, சூரியாதிபதங்கள் காரியப்பிரமங்களையும் உணர்த்துவனவாம். ஆதலால், அவைகளிலும் காரணப்பிரமத்தின் ஸ்துதியும், காரியப்பிரமங்களின் நிந்தையும் உள. கணேசபுராணத்தில் கணேசபதம் காரணப்பிரமத்தின் வாசகம். விஷ்ணு, சிவன்முதலியபதங்கள் காரியப்பிரமங்களின் வாசகங்களாம்; அதிலும் காரணத்தின் ஸ்துதியும், காரியங்களின் நிந்தையும் உள: காளிபுராணம், சூரியபுராணங்களிலும் அப்படியேஉண்டு; இவ்வாறு, சகலபுராணங்களிலும், காரியகாரணங்களின்நாமசங்கேதங்கட்குப்பேதம் உள; கொள்ளற்பாலதும், தள்ளற்பாலதும் ஆகிய பொருள்கட்குப்பேதமில்லை. சகலபுராணங்களிலும் காரணப்பிரமத்தின் உபாசனை கொள்ளற்பாலதும், காரியங்களின் உபாசனை தள்ளற்பாலதுமாம்; அதனால் சகலபுராணங்களும் ஓர் காரணப்பிரமத்தை உபாசிக்கத்தக்கதாகவே உணர்த்துகின்றன; அவைகளுக்குத் தம்மில் விரோதமில்லை.

(உஙு) எப்படியும் சதுர்ப்புஜ, திரிநேத்திர, சதுண்ட, அஷ்ட புஜாதி மூர்த்திகள் மாயையின் பரிணாமமும், சேதனத்தின் விவர்த்தமுமாம்; ஆகலின், காரியம்: அவைகளின் உபாசனையுங்கூறப்பட்டிருக்கின்றது; அங்ஙனங்கூறப்பட்டிருப்பினும், அச்சதுர்ப்புஜாதி மூர்த்திகளுக்கும், மாயா விசிட்ட காரணப்பிரமத்திற்கும் விசாரிக்குமிடத்துப்பேதமில்லை. ஆதலால், காரியப்பிரமங்களின் ஆகாரங்களை வாதித்து* அவர்களைக் காரணரூபமாக உபாசிக்க வேண்டுமென்பது தாற்பரியம். என்னை? ஆகாரம் காரியமாதலின், துச்சம்: காரணம் சத்தியம். யாவரது மந்தப்பிரஞ்ஞை ஆகாரத்திலேயே ஸ்திதமாமோ! அவர் சாஸ்திரத்திற்சொன்ன ஆ

*வாதித்தல் = காரியம், காரணப்பிரமமே அந்நியமன்று என்பதாம்.

காரத்தையே உபாசனைசெய்க; அதனாலும் பிரஞ்ஞை நிச்சலமாய்க் காரணப்பிரமத்தின் உபாசனையில் ஸ்திதி பெறும்: இவ்வாறே திருவாய்மொழியினும், "உணர்ந்துணர்ந் திழிந்தகன்றுயர்ந் துருவியந்த விந்நிலைமை, யுணர்ந்துணர்ந்துணரினு மிறைநிலை யுணர்வரி துயிர்காள், ணுணர்ந் துணர்ந் துரைத் துரைத் தரியய னரனென்னு மிவரை, யுணர்ந்துணர்ந் துரைத் துரைத் திறைஞ்சுமின் மனப்பட்ட தொன்றே." எ-ம், ஒன்றெனப் பலவென வறிவரும் வடிவினு ணின்ற, நன்றெழி நாரண னான்முக னரனென்னு மிவரை, ஒன்றநும் மனத்துவைத்துள் ளிநும்மிரு பசையறுத்து, நன்றென நலஞ்செய்வ தவனிடை நம்முடை நாளே." எ-ம், அருளிச்செய்திருப்பதுகாண்க.

(உச) ஜகத்காரணன், சத்தியகாமன், சத்தியசங்கற்பன், சர்வஞ்ஞன், சுதந்தரன், சர்வப்பிரேரகன், கிருபாலு என்றிவ்வாறு ஈசுரத்தன்மங்களைச் சிந்திப்பாயாகவென்று காரணப்பிரமத்தின் உபாசனைகூறியிருக்கின்றது.

காரணப்பிரமமன்றி வேறே அநேக மூர்த்திகளும் சாஸ்திரங்களிற் கூறப்பட்டுள்ளன; அவை யெல்லாம் உபாசனையின் நிமித்தம் அன்று. சகலமும் காரணப்பிரமத்தின் உபலட்சணமாகவே கூறப்பட்டிருக்கின்றன.

(உரு) உபலட்சணமாவது, ஒன்றன் ஏகதேசத்திருப்பதும், ஓர்போதிருப்பதும், வியாவர்த்தக* மாயிருப்பதும் யாது: அது. என்னை? காகமிருப்பது தேவதத்தனது கிரகம் என்னும்வாக்கியத்தில் காகம் உபலட்சணம். எங்ஙனம் காகமானது தேவதத்தனது கிரகத்தின் ஏகதேசத் திருப்பதாயும், ஓர்போதிருப்பதாயும், வியாவர்த்தகமுமாயிருக்கிறதோ: அங்ஙனம் ஜகத் காரண பிரமத்தின் ஏகதேசத்தில் சதுர்ப்புஜாதிமூர்த்திகள் உள்ளன: ஓர்போது உண்டாகின்றன; அச் சதுர்ப்புஜாதி மூர்த்திகள் காரணப் பிரமத்தின்

---

*வியாவர்த்தகம் = அந்நியத்தினின்றும் ஒன்றை வேறுபடுத்துமது. இஃது சா-வது பிரசங்கத்திற்காண்க.

கண்ணேயே உண்டாகின்றன: அங்கியத்தின்கண்ணில்லை என வியாவர்த்தகமாகவிருத்தலின், அவை உபலட்சணமாம். உபலட்சணத்திற்கு விசேஷியவஸ்துவின் சொருபஞானம் உளதாதலே பிரயோஜனமாம். காகத்தால் தேவதத்தனது கிரகத்தின்ஞானம் உளதாதலே பிரயோஜனமல்லாமல் அங்கியப் பிரயோஜனம் இல்லாததுபோல சதுர்ப்புஜமுதலிய ஆகாரங்களால் நிராகாரமான காரணப் பிரமத்தின் ஞானமே உபாசனையின் நிமித்தம் மூர்த்திப் பிரதிபாதனத்தின் பிரயோஜன மல்லாமல் அங்கியமில்லை.

(உசு) மந்தப்பிரஞ்ஞையுடையோர், சாஸ்திராபிப்பிராயம் அறியாமல் அவ்வாகாரங்களில் ஆக்கிரகஞ்செய்கின்றதுமன்றி சியாலாசாரமேயநியாயத்தால் பரஸ்பரம் கலகமும்விளைக்கின்றனர். சியாலா என்பது ஒருஸ்திரீயின் தமையன் பெயர். சாரமேயன் என்பது நாயின்பெயர். நியாயம் என்பது திருஷ்டாந்தம். ஒரு ஸ்திரீயினுடைய தமையனுக்கும், அவள் கணவன்வீட்டுக்கு அடுத்தவீட்டு நாய்க்கும் உற்பாலகன் என்றுபெயர் இருந்தன. அந்த ஸ்திரீயின் தமையனுடைய சத்துருவுக்கும், அவள் கணவன் வீட்டு நாய்க்கும் தாவகன் என்று பெயர் இருந்தன; இப்படியிருக்க, அந்தஸ்திரீயானவள் பிரதமத்தில் கணவன்வீட்டுக்கு வந்தாள்; அப்போது மேற்கூறிய இரண்டு நாய்களும் ஒன்றோடொன்று சண்டைசெய்துகொண்டிருந்தன; அதைக்கண்ட அவளுடையகணவன், அடுத்தவீட்டுநாயாகிய உற்பாலகனை, பன்றி, கழுதை என்பனமுதலியவார்த்தைகளால்வைது, தன்னுயைத்தாவகனைப்போற் கிடையாதென்று பெருமைப்படுத்திக்கொண்டாடினன்; அதைக்கேட்டிருந்த அந்தஸ்திரீக்குத் தன்தமையனை வைகிறதாகவும், தமையனுடைய சத்துருவைக் கொண்டாடுகிறதாகவும், பிராந்தி யுண்டாகி அதனுல் அவள் துக்கமுடையவளாய்த் தன் பர்த்தாவோடு கிலேசித்திருந்தாள். நாயகன் அபிப்பிராயம்அறியாமல் சமானமானநாமத்தாலே பிராந்தி கொண்டு அவள் எப்படிக் கிலேசித்திருந்தாளோ அப்படியே

வைணவகிரந்தங்களில் சிவன் முதலிய நாமங்களால் காரியப்பிரமங்களை நிந்தைசெய்திருப்பதைக்கண்ட சைவர் முதலியோர்களும், சைவகிரந்தங்களில் விஷ்ணுநாமத்தால் காரியப்பிரமத்தை நிந்தைசெய்திருப்பதைக்கண்ட வைணவர்களும், துக்கத்தையடைகின்றனர். காரணப் பிரமம் உபாசிக்கத்தக்கது. காரியப்பிரமங்கள் விடத்தக்கனவென்பதே சகல புராணங்களின் அபிப்பிராயமாம். மாயாவிசிட்டசேதனம் காரணப்பிரமமென்றும், மாயையினுற் பண்ணப்பட்ட காரியவிசிட்டசேதனம் காரியப்பிரமமென்றும் சொல்லப்படும். பாரதவியாக்கியானத்தின் ஆரம்பத்தில் அறிஞர்சிகாமணியாகிய நீலகண்டபண்டிதரால் இவ்வா றெழுதப்பட்டிருக்கிறது. சகல வேதாந்தங்களின் சித்தாந்தமும் இதுவே என்று விசாரசாகரத்தின் ஏழாந்தரங்கத்திற் கூறியிருக்கின்றது.

இந்நூலாசிரியர், இவ்வபிப்பிராயத்தை அறிவித்தற்பொருட்டே காரியப்பிரமங்களின் சின்னங்களான சதுர்ப்புஜ, திரிநேத்திர, சதுண்ட, அஷ்டபுஜாதிகளுள்ளே யாதொன்றையும் எடுத்து விசேடியாமல், "ஏகநாயகன் பதங்கள் போற்றி" என்றார்.

இலக்கணையினுல் தன்னநுபூதிமயமான இருக்குவேதமஹாவாக்கியப்பொருளையே சிந்தித்ததாம். ... ...(க)

ஆன்மசொரூப நமஸ்காரரூப
மங்கலம்.

ஈன்றளித் தழிக்குஞ் செய்கைக் கேதுவா மயனுய் மாலாய்
ஆன்றவீ சனுமாய்த் தானே யநந்தமூர்த் தியுமாய் நிற்கும்
மூன்றமுந் தனுமா யின்பப் புணரியா தவனுய் நாளும்
தோன்றிய விமல போத சொரூபத்தைப் பணிகின் றேனே (உ)

(இ-ள்) தானே—ஈன்று-உலகத்தைச்சிருஷ்டித்து—அளித்து-இரட்சித்து—அழிக்கும்-சம்மரிக்கும்—செய்கைக்கு-(இம் முத்)தொழிற்கும்—ஏது ஆம்-காரணமாகும்—அயன் ஆய்-பிரமனுகியும்—மால் ஆய்-நாராயணனுகியும்—ஆன்ற ஈசனும் ஆய்-மாட்சிமைபொருந்திய உருத்திரனுகியும்—அநந்தமூர்த்தியும்ஆய்-(இன்னும்) அளவிறந்தகா